Registered as a News Paper    பக்கங்கள்: 4    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    புரட்டாதி 12    (28-09-1991)    சனிக்கிழமை    ஓசை: 212

## வவு. தொழில் புரிவோருக்கு விசேட அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் தொழில்புரிவோருக்கான தனியான அனுமதி அட்டை வழங்கப்பட்டுவருவதாகப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பொன்றில் கூறப்பட்டுள்ளது. இந்த அனுமதி அட்டையை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு பெற்றுக்கொள்ளுமாறும், இந்த அனுமதி அட்டையைப் பெற்றுக் கொண்டவர்களுக்குத் தடைமுகாம்களைத் தாண்டிச்செல்ல முன்னுரிமை வழங்கப் படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓமந்தை தடைமுகாமிலும், கோண்டாவில் அனுமதி வழங்கும் அலுவலகத்திலும் இலவச (4 ஆம் பக்கம் பார்க்க)

# மணலாற்றில் இராணுவம் பின்வாங்கியது
# ஒருமாத யுத்தத்தில் 200 புலிகள் வீரமரணம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில்கடந்த ஒருமாதகாலமாகத்தொடர்ந்து நடந்தமோதல்களினால் ஏற்பட்ட பலத்த இழப்பையும் பாரிய சேதத்தையும் அடுத்து சிறிலங்கா இராணுவம் முகாம்களுக்குப் பின்வாங்கியது. இந்த மோதல்களில் இருநூறு வரையிலான விடுதலைப் புலிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

இதனிடையே மணலாற்றுப் பகுதியில் நேற்று முதல் இராணுவ நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

மணலாற்றுப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமைக்கும், அரசியல் நெருக்கடிகளுக்கும் எதுவித தொடர்புமில்லை என்று இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்ததாக பி.பி.சி நேற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை
## தீர்விற்கு உதவுவதற்கே கிட்டுவிற்கு புகலிடம்

(சுவிஸ்லாந்து)

இலங்கையில் வடக்குக் கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உதவுவதற்காகவே சுவிஸ்லாந்து கிட்டுவிற்கு புகலிடம் அளித்தது என சுவிஸ் ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிட்டு பிரபாகரனுடன் நெருங்கிய தொடர்பு உள்ளவராகையினால் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கிட்டுவை பயன்படுத்தலாம் எனவும் இதனடிப்படையிலேயே அகதிகளுக்கான சுவிஸ் அமைச்சர் பீட்டர்ஆர்பென்ஸ் ஜூலையில் கொழும்பு வந்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் பற்றி பேசினார் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## இராமிய ஆஸ்பத்திரி மீது எறிகணைத் தாக்கு; இருவர் காயம் கட்டடம் சேதம்

(வேலணை)

காரைநகர் ஊர்காவற்றுறை பகுதியில நிலைகொண்டுள்ள சிறிலங்கா அரசின் ஆயுதப் படையினர் நேற்று முன்தினம் 26ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் வேலணைப் பகுதியை நோக்கி ஏவப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலை பலத்த சேதத்துக்குள்ளானது நள்ளிரவு மேற்கொள்ளப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ★ பாராளுமன்றத்தில் காலியாகவுள்ள
# யாழ். மாவட்ட உறுப்பினர்கள் பதவிக்கு அறுவர் நியமனம்

## புலிகள் பராமரிப்பிலுள்ள
## 24 தமிழக மீனவர்களை ச.தே.செ சிலுவைசந்தித்தது

ச.தே.செ சிலுவைசந்தித்தது

யாழ்ப்பாணத்தில் விடுத இருபத்தி நான்கு பேரையும் லைப்புலிகளின் பாராமரிப்பி நேற்று சர்வதேச செஞ்சிலு லுள்ள தமிழக மீனவர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி வழங்கிய ஆயுதங்களால்தான்

# ஆனையிறவுப் போரில் புலிகள் 202 படையினரைக் கொன்றனர்

- லலித்

(கொழும்பு)

''வடமராட்சி யுத்தத்தின் போது எமது படை வீரர்கள் திறமையாக செயற்பட்டு 15 மைல் தூரத்தை ஐந்து நாட்களுக்குள் கைப்பற்றினார்கள். அதில் 29 படை வீரர்கள் மட்டுமே கொல்லப்பட்டனர். ஆனால் ஜனாதிபதி புலிகள் இயக்கத்திற்குக் கொடுத்த ஆயுதங்களைக் கொண்டு புலிகள் ஆனையிறவு முகாமைத் தாக்கியதால் 202 படை வீரர்கள் கொல்லப்பட்டனர். புலிகள் இயக்கத்திற்கு ஆயுதம் கொடுத்த ஜனாதிபதியால் நாட்டின் இறைமையைப் பாதுகாக்க முடியாது''.

இவ்வாறு கடந்த திங்கட்கிழமை மாலை குருநாகலில் மகாவிகாரை முன்னிலையில் நடைபெற்ற ஐ.தே.க. அதிருப்தியாளர்களின் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அத்துலத் முதலி வடமராட்சி யுத்

(4ம் ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை அழிக்கும் வரை போராட்டம் நிற்காது

—விமல் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

ஈரோஸ் அமைப்புக்கும், எமது கட்சிக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை. எமது தலைவரைப் பாதுகாக்கஎமது கட்சிக்கு சக்தி உள்ளது என அமைச்சர் விமல்விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அவசர கால சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும், விடுதலைப்புலிகளை அழிப்பதே எமது நோக்கம்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் சுட்டுக் கொலை பலர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமங்களில் புகுந்து இளைஞர்களைக் கைது செய்யும் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. கடந்த புதன் கிழமை காலை களுவாஞ்சிக்குடியிலிருந்து களுதாவளைக்கு சென்ற இராணுவத்தினர், இரத்தினராசா அரசரத்தினம் (21) என்ற இளைஞரை சுட்டுக் கொன்றுள்ளனர். கண்ணதாசன் தியாகராசா, கந்தையா உதயகுமார் என்ற இரு இளைஞர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## பிரேரணையை தோற்கடிக்க போதிய பலம் உள்ளது

- ரணில் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பாராளுமன்றச் செயலாளரிடம் கையளித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதைத்தோற்கடிக்க அரசிடம் போதிய பலம் உள்ளது என்று சபை முதல்வரும், தொழில், விஞ்ஞான மற்றும் தொழில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# போராளி தேச விடுதலைக்காக வாழ்கின்றான்; இறக்கின்றான்

- மகேந்திரராசா

(நமது நிருபர்)

போராளி ஒருவன் வாழும் போதும், தேச விடுதலைக்காகவே வாழுகிறான் இறக்கும் போதும் தேச விடுதலைக்காகவே இறக்கின்றான். இவர்கள் வாழும் போதும் சரி இறந்த பின்பும் சரி நல்லதையே செய்கின்றார்கள். இதனாலேயே இந்த அக்காச்சி எழுச்சிக்குடியிருப்பு திறந்து வைக்கப்படுகின்றது. இதனை இந்த மக்கள் நன்கு புரிவார்கள் எனநேற்று முன்தினம் கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பைத் திறந்து வைத்து உரையாற்றும் போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா தெரிவித்தார்.

மேலும் தொடர்ந்து அவர் உரை நிகழ்த்துகையில் தேசிய விடுதலைக்காக இன்று வரை ஆயிரக்கணக்கான போராளிகள் தம்மை உயிர்த் தியாகம் செய்திருக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரதுநினைவாகவும் இது போன்ற பல எழுச்சிக் குடியிருப்புக்களும், தொழில் நிலையங்களும் அமைய வேண்டும் என்றார்.

தமிழீழ மக்கள் எல்லோரது வாழ்க்கைத் தரமும் முன்னேற்ற வேண்டும். இதற்கு எமக்குப் பல சவால்கள்

(3- ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### சர்மா, சரத், ஈசன்

மணலாறு மாவட்டத்தில் கடந்த 21 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் சர்மா வீரமரணமடைந்நார். 22ஆம்திகதிஇதே இடத்தில் நடைபெற்ற மோதலில்சரத் (செபஸ்தியாம்பிள்ளை அற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மூவர் விரைவில் நியமனம் பெறுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சுயேச்சைக்குழு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேர் விரைவில் பதவி ஏற்கவுள்ளனர். மீதமுள்ள மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் விரைவில் நியமனமாகலாம் எனத் தெரிகின்றது.

கடந்த புதன்கிழமை கொழும்பு சென்ற சுயேச்சைக் குழுத் தலைவர் செபஸ்தியாம்பிள்ளை எட்வேர்ட்டும் புதிய உறுப்பினர் பட்டியலில் இடம்பெற்ற முன்னாள் யாழ். மாநகர ஆணையாளர் சிவஞானமும் இந்த ஆறு பேரின் நியமனப் பத்திரங்களையும் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்தனர்.

சிறிலங்கா நாடாளுமன்றத்திற்கென 1989 பெப்ரவரியில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போது ஈரோஸின் அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணியின் ஆதரவோடு போட்டியிட்ட சுயேச்சைக்குழு யாழ். மாவட்டத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை தொடர்பாய் மீண்டும் 'தொண்டா' கடிதம்

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அடிப்படைகளை அறிவிக்குமாறு அமைச்சர் தொண்டமான் புலிகள் இயக்கத்திற்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் கோரியுள்ளார்.

தான் முன்னர் அனுப்பிய கடிதத்திற்கு பதில் கிடைத்ததாகத் தெரிவித்துள்ள அமைச்சர் தொண்டமான் கடிதத்தில் அடங்கியுள்ள விபரங்கள் எதையும் வெளியிட மறுத்துவிட்டார். பேச்சுவார்த்தை நடத்த தன்னை யாழ்ப்பாணம் வருமாறு புலிகள் இயக்கம் கடிதத்தில் அழைத்திருப்பதாக கூறியபோதும், எப்போது யாழ்ப்பாணம் செல்வது என்பது பற்றித் தீர்மானிக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

அதேவேளை பி.பி.சிக்கு சமரசத் திட்டம் தொடர்பா பேட்டியில், தொழிலாளர் கத் தொண்டமான் வழங்கிய

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தின் புதிய பா. உறுப்பினர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து புதிதாக தெரிவு செய்யப்பட்ட சுயேச்சைக் குழு பாராளுமன்ற உறுப்பினர்களின் விபரம்:

- ★ வைகாசி சுப்பிரமணியம் 13, செட்டித்தெரு நல்லூர் யாழ்ப்பாணம்)
- ★ வைத்திலிங்கம் செல்லத்தம்பி 174, ஆறுமுகம் வீதி வட்டுக்கச்சி.
- ★ வேலுப்பிள்ளை சிவனடியார் தண்ணீரூற்று, முள்ளியவளை.
- ★ கணபதி செல்வநாயகம் மயிலணி வடக்கு சுன்னாகம்,
- ★ செபஸ்தியாம்பிள்ளை எட்வேர்ட் 8/1, 3 ஆம் குறுக்கு வீதி நாவாந்துறை யாழ்ப்பாணம்.
- ★ கயிலாயம்பிள்ளை வேலுப்பிள்ளை கந்தையா சிவஞானம் 904/5 பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.

பட்டப்படிப்புக்கள் கல்லூரி

# புதிய மாணவர்களை அனுமதித்தல் 91/92

யாழ். பேராதனைப் பல்கலைக்கழகங்களின் வெளி நிலைப்பட்டப் பாடநெறிகளான

கலை முதற் தேர்வு G. A. Q.

விஞ்ஞான முதற் தேர்வு G. S. Q.

வணிக முதற் தேர்வு (First In Commerce)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி
19-10-91வரை
நீடிக்கப்பட்டுள்ளது

விரிவுரைகள்
20-10-91இல்
ஆரம்பமாகின்றன

விண்ணப்பப்படிவத்தினையும் விபரத் திரட்டையும் ரூபா 10 செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளலாம்

விபரங்களுக்கு
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள்
கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

(B-3200)



வடமாகாண, இணைக்கப்பட்ட பல்கலைக் கழகக் கல்லூரி, வவுனியா.

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24-ம் திகதிவரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

மனையியல் / மனைப் பொருளியல் / உணவு விஞ்ஞானம் / ஊட்டச்சத்து விஞ்ஞானம் / உயிரிரசாயனம்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II

1\. 1) உரிய பாடத்தில் முதலாம் தர அல்லது இரண்டாந்தர (மேற் பிரிவு) சிறப்புப் பட்டம்;

அல்லது

2) உரிய பாடத்தில் இரண்டாந்தர (கீழ்ப் பிரிவு) சிறப்புப் பட்டம்;

அல்லது

3) உரிய உயர்கல்வி நிறுவனத்தின் சிபார்சின்படி பல்கலைக் கழகமானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கக்கூடிய தொழில் தகைமைகள்.

2\. உரியதுறையில் பெறப்பட்ட ஒரு பட்டப்பின் படிப்பு (மேற்பிரிவு) சித்தி பெற்றிருத்தல்:

அல்லது

2 உரிய பாடத்தில் சிறப்புப் பட்டத்தில் இரண்டாந்தர (கீழ்ப் பிரிவு) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

3\. உரிய சிறப்புப்பட்டத்தில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமை;

அல்லது

4\. மேற்குறித்த பாடங்களிலொன்றுடன் பொதுப்பட்டத்தில் சிறப்புச் சித்தி அல்லது சாதாரண சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமை;

அல்லது

5\. உரிய கல்வி நிறுவனத்தின் சிபார்சின்படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினரால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏனைய தகைமைகள்

சம்பள அளவுத்திட்டம்:

1 பல்கலைக்கழக கல்லூரி விரிவுரையாளர் (தகுதிகாண்)

2\. பல்கலைக்கழக கல்லூரி விரிவுரையாளர்

1\. 3,900 - 06 x 100- 4500(மாதமொன்றுக்கு)

2\. 4,500 - 16 x 200 - 7,700 (மாதமொன்றுக்கு)

ஒரு கல்லூரி விரிவுரையாளர் (தகுதிகாண்) அவசியமான தேவைகளைத் திருப்திப்படுத்தி ஆறாண்டு காலத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் கல்லூரி விரிவுரையாளர் பதவிக்கு பதவி உயர்வு பெற விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராவார். ஏற்கனவே



வரி விளம்பரம்

*English* (ஆங்கிலம்)
**Spoken English with Grammer and Literature**

1) English படிப்பை முதலிலிருந்து கற்க விரும்புபவர்களுக்கு 6 மாதப் பயிற்சியும், G. C. E. O/L English ஐ December 1991 இல் எடுப்பவர்களுக்கும் University படிப்புக்குத் தகுதி அடைந்தவர்களுக்கும் 6 மாத விசேட பயிற்சியும் அளிக்கப்படும். ஆரம்ப திகதி: 28-09-91 காலை 9-00 மணிக்கு விபரங்களுக்கு: V. N. Kandasamy A I B. Part I (London) Inter (London) 87, Station Road, Kokuvil.
(R/1784)


குறிப்பு

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் அனுபவத்தைக் கவனத்திற் கொண்டு பின்வரும் சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் அவர் (3900 - 06X100 - 4500) வைக்கப்படலாம். இது மேலே கூறப்பட்டுள்ள ஆங்கிலப் (போதனாசிரியர்களுக்கு) சட்டுரையாசிரியர்களுக்கு மாத்திரம் ஏற்புடையது.

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் பல்கலைக் கழகச் சேவையில் சேருபவர்களுக்கு இது ஏற்புடையதாகாது ஆனால் அரசாங்க சேவையிலுள்ளோர் பதிதாண்டுச் சேவையை நிறைவு செய்திருப்பின் மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படி


31-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கணுக்கேணி
தாமு நல்லதம்பி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 26.06.1915 | 30.08.1991 |

அன்பின் இருப்பிடமாக பண்பின் பிறப்பிடமாக பொறுமையின் சிகரமாக சபையில் வல்லவராக மங்காதமணி விளக்காய் குன்றாத சுடர் விளக்காய் குன்றின் மேல் தீபமாக எங்கள் குடும்பத்தின் ஒளியாக மிளிர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
காலனின் கொடுமையினால் எம்மையெல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில்
கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 29.09.1991 ஞாயிற்றுக்கிழமை நிகழவிருப்பதால் அத்தருணம் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அன்றைய நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
| --- | --- |
| கணுக்கேணி- மேற்கு முள்ளியவளை | மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் |

(R/1763)



அங்கத்துவ தொடர்பு கல்வி விஸ்தரிப்பு உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் ஆகக் குறைந்த கல்வித் தகைமை க. பொ. த. (உ/த) சித்தி.

சம்பளம்:

நியமனம் பெறுபவரின் தகைமையை கவனத்தில் கொண்டு தீர்மானிக்கப்படும்.

(B/3200)

## 75-ம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்
26-12-1964

வீரமரணம்
16-07-1991

### வீரவேங்கை டயஸ்
(ஜஸ்ரின் வபியன் றோய்)

துயிலாத -மை பொழுது துள்ளித் திரிந்தமையால்
நிலையாக துயில் கொள்ள நீ ஆசை கொண்டதேனோ
தாயவளின் மூத்த முதல் இளங்குயிலே
வீட்டினில் தம்பியர்க்கும், தங்கையர்க்கும்
தலைவனாய் நின்று வழிகாட்டியவனே
இனைப்பாற வந்த தாய் நாட்டில்
கொடுமை பல கண்டு களமாடச் சென்றாயோ
சுதந்திரத்தை சுதாகரிக்க கடராக கரைந்தவனே
கறையடித்த வைகறைப் பொழுது அன்று
உன் உயிரை வாங்க சலனமின்றி ஜனனித்ததோ
நிஜங்களைக் காண நிழலாகிப் போனவனே
அடங்கை நிலைக்கு சவுமணியடிக்க புறப்பட்ட
தமிழ் மான வீரனே எழில் மகனே
உயிரோட்ட மளிக்க வந்த வீரவேங்கையான
எங்கள் நோயவ்வா ஈழத்தாயின்
அரவணைப்பில் சுகமாக துயில்கிறாயா?

சரம்பொன்

அன்புமிகு பெற்றோர்
தம்பிமார், தங்கைமார்
அன்ரிமார், உடன் பிறவாச்
சகோதரர்கள், நண்பர்கள்,

(R/1782).

---

...ரிக்கக்கூடிய தொழில் தகைமைகள்.

2. உரியதுறையில்பெறப்பட்ட ஒரு பட்டப்பின் ஆராய்ச்சிப்பட்டம். அப்பட்டத்திற்காக விதிக்கப் பெற்ற பதிவு செய்யப்படும் காலம் இரண்டு கல்வியாண்டுகளுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்,

அல்லது

உரிய உயர்கல்வி நிறுவனத்தின் சிபாரிசின் பேரில் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கக்கூடிய உயர் தொழில் தகைமைகள்.

3. பின்வருவனவற்றில் ஒன்றில் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவற்றில் குறைந்தபட்சம் ஆறாண்டு அனுபவம். (மேலே இரண்டில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கு ஈடுபடுத்தின காலம் உட்பட)

I) பல்கலைக்கழக மட்டத்தில் கற்பித்தல் அனுபவம்.
II) உயர் தொழில் அனுபவம்.
III) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் செய்த ஆய்வு.

4. சம்பள அளவுத்திட்டம்:-
ரூபா 8 000 — 5x250 —9,250/- மாதம் ஒன்றுக்கு.

மனையியல் / மனைப் பொருளியல்/உணவு விஞ்ஞானம் / ஊட்டச்சத்து விஞ்ஞானம் / உயிரிரசாயனம் பல்கலைக்கழக கல்லூரி விரிவுரையாளர்/பல்கலைக்கழகக்கல்லூரி விரிவுரையாளர் [தகுதிகாண்]

1. உரிய பாடத்தில் சிறப்புப்பட்டத்தில் முதலாம் அல்லது இரண்டாம் தரத்தில் சித்தி அல்லது அதற்கு சமமான உயர் தகைமைகளை விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராவர். ஏற்கனவே உயர்கல்வி நிறுவனமொன்றில் அல்லது அதையொத்த நிறுவனமொன்றில் ஆறாண்டு திருப்திகரமான சேவையைநிறைவுசெய்த ஒருவர் கல்லூரி விரிவுரையாளர் பதவிக்கு நியமிக்கப்படலாம்.

தற்காலிக கட்டுரை ஆசிரியர் (போதனாசிரியர்) உயிர் விஞ்ஞானம்/ ஆங்கிலம்

இயற்கைவிஞ்ஞான தற்காலிக கட்டுரையாசிரியர் ஒருவர் பின்வரும் பாடங்களில் இரண்டைக் கொண்ட பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். இரசாயனவியல், பௌதீகவியல் தாவரவியல், விலங்கியல்

ஆங்கில கட்டுரையாசிரியர் (போதனாசிரியர்) ஒருவர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் முதல் வகுப்புச் சான்றிதழ் பெற்றவராக அல்லது சிறப்பு ஆங்கில ஆசிரியர்களின் சான்றிதழ் உடையவராக அல்லது ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பிக்கும் டிப்ளோமாச் சான்றிதழைக் கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்து பெற்றவராக அல்லது மேற் சொல்லப் பட்ட தகைமைகளுக்குசமமான தகைமை உடையவராக இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:-
ரூபா 8.000மாதமொன்றுக்கு (நிலையானது)
(மேற்படி சம்பளத் திட்டம் உரிய காலத்தின்முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுபவர்களுக்கும் பொருந்தும்)

...சேவையை நிறைவுசெய்திருப்பின் மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைப்பதற்கு கவனத்துக்கெடுக்கப்படும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர் பல்கலைக் கழக சேமலாப நிதிக்கு உதவுதொகை அளிப்பவராதல் வேண்டும். அவர் தனது ஊதியத்தில் 10 சதவீதத்தை உதவு தொகையாகச் செலுத்துதல் வேண்டும். பல்கலைக்கழகம் 15 சதவீதத்தைச் செலுத்தும்.

விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்ததேதி, வயது, கல்வி சார்ந்த உயர்தொழில் சார்ந்த தகைமை, அனுபவம், இதர விபரங்கள், தங்களைப்பற்றி விசாரிக்கக்கூடிய இருவரின் பெயர்கள், விலாசங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய விண்ணப்பங்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளருக்கு 1991 ஒக்ரோபர் 24ஆம் தேதியோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

இதர பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழகக்கல்லூரிகள், அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991.09.25

(B/3198)

---

நியமனம் பெறுபவரின் தகைமையை கவனத்தில் கொண்டு தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பமுடிவுத் திகதி:**
10.10.1991

**விண்ணப்பிக்கும் முகவரி:**

"பொது முகாமையாளர்"
வடமாகாண தெங்கு உணம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(B/3205)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1991-09-28

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் வட்டக்கச்சியில் தேசவிரோதிகளால் கொலை செய்யப்பட்ட

கிட்டு (மயில்வாகனம் கிருஷ்ணதாஸ் - திருவையாறு)

1990ஆம் ஆண்டு மண்கும்பான் பகுதியில் சிறிலங் காப்படையினரின் நேரடிமோதலில் வீரமரணமெய்திய

ரமேஷ் (இரத்தினம் சத்தியராஜ் "வானம்பாடி" - காரைநகர்)

யாழ் கல்முனை கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் சடலமாக கரையொதுங்கிய கடற்தொழிலாளி மற்றும் இவருடன் சென்று காணாமற்போன ஒரு சிறுவன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3202)

# மக்களைப் பந்தாடும் செயலகமும்; பல நோ. கூட்டுறவுச் சங்கங்களும்

### தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"இதே வகையில் மண்ணெண்ணெய், சவர்க்காரம் என்பன வந்தால், கூட அடுத்த சித்திரைப் புத்தாண்டுக்கிடையில் யாழ் மாவட்ட மக்கள் அனைவருக்கும் ஒரு சவர்க்காரமும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெயும் கிடைத்துவிடுமோ என்பது சந்தேகமே' என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்திக் குறிப்பில் கூறியுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும்,

இதோ வருகிறது என்ற பெரிய பிரசாரங்களுக்கு மத்தியில் மண்ணெண்ணெய், சவர்க்காரம் வந்துவிட்டது. ஆனாலும் முழு அளவில் பாவனையாளர் பயன்பெற முடியாத நிலை இருப்பதாக கவலை தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக விநியோகங்கள் எதுவும் முறையாக நடைபெறவில்லை மக்கள் அரச செயலகம் உதவி அரச அதிபர் அலுவலகம், ப. நோ. கூ. சங்கம், என்று பந்தாடப்பட்டார்கள்.

இடம் பெயர்ந்தோர் அனைவருக்கும், நிவாரணம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முகாம்களில் உள்ள ''கூ'' அட்டை உடையோரும் பணம் கொடுத்து நிவாரணம் பெற முடியும்.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகலருக்கும் புரட்டாதி மாதத்தில் ஒரு வாரத்துக்கான உணவுப் பொருள்கள் பணத்திற்கு விற்பனை செய்ய முடியும், இப் பொருள்களை ப. நோ. கூ. சங்கங்கள் பெற்று விற்பனை செய்ய வேண்டும். என்ற தகவல்களை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அலுவலகம் அறிவித்துள்ளது இத்தகவலின் சரியாக இருப்பின் கால்வயிறு உணவு கிடைக்கக்கூடும். இதனைப்பெற்று வழங்க துரிதமாக செயல்பட வேண்டிய கடமை ப நோ. கூ சங்கங்களுக்கு உள்ளது. மக்களுக்காக மக்களால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளான ப. நோ. கூ. சங்கங்கள் இலாப நட்டக் கணக்கைப் பார்க்காமல் தமது சேவையை துரிதப்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதுடன் மக்களுக்கான விநியோகத்தை அரசு தடைசெய்திருந்தாலும் உள்ளூர் அரச நிர்வாகமும், ப. நோ. கூ. சங்கங்களும் மக்களது நிலைமைகளைப் புரிந்து செயற்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

## சிந்தனைக்கு

நான் நம்பும் ஒரு கொள்கைக்காகத் தியாகம் செய்ய எனக்கு தடையில்லை. ஆனால், இன்னொருவர் கொள்கைகளுக்காக நான் தியாகப்படுவதையே எதிர்க்கின்றேன்

— ஜான்கேல்ஸ்வொர்தி

ஈழநாதம்

31, [illegible], யாழ்ப்பாணம் - 28-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் [illegible] விளம்பரப்பகுதி [illegible]
[illegible]

## தேர்தலுக்காகவல்ல போராட்டம்

"இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயாராக உள்ளோம். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் முடிவில் விடுதலைப் புலிகள் வெற்றி பெறும் பட்சத்தில் திரு பிரபாகரனை, முதலமைச்சராகத் தெரிவு செய்து கொள்ள முடியும்" இவ்வாறு இந்தியாவிற்கான சிறிலங்கா உயர்ஸ்தானிகர் நெவில் கனகரெட்னா கூறியுள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உட்பட அமைச்சர்கள், அதிகாரிகள் யாவரும் இனப்பிரச்சினைத் தீர்விற்கு சிறிலங்கா அரசாங்கம் தயாராக இருக்கின்றது எனக் கூறுகின்றார்களே ஒழிய பேச்சுவார்த்தை நடத்துவதற்கான எந்தவொரு சூழ்நிலையையும் உருவாக்குவதில்லை. இவ்வருட ஆரம்பத்தில் இருந்து புலிகள் தாம் நிபந்தனையற்ற பேச்சிற்கு எப்பொழுதும் தயாராகவே உள்ளோம் என அறிவித்து வந்தபோதிலும், அதனைக் கருத்தில் கொள்ளாது புலிகள் நிபந்தனையுடன் கூடிய பேச்சிற்கு வர வேண்டும் என எதிர்பார்க்கின்றது. ஆனால் புலிகளைப் பொறுத்து அது சாத்தியப்படக் கூடிய ஒன்றல்ல என்பதை அதன் வரலாறே உணர்த்தும்.

மேலும் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையையும், தீர்வையும் பற்றிப் பேசும் சிறிலங்கா அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், [illegible]

## ஆயுர்வேத வைத்தியர் பெயர் கோரப்பட்டுள்ளது

(நல்லூர்)

யாழ். மாவட்டத்தில் பதிவு செய்த ஆயுர்வேத வைத்தியர்களின் பெயர்ப்பட்டியலை வரும் ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு இலங்கை ஆயுர்வேத சபைத் தலைவர் பிரதேச செயலாளர் மூலம் யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்.

1991ஆம் ஆண்டின் ஆயுர்வேத சட்டத்தின் கீழ்த்தெரிவிலும் உள்ள பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களிலிருந்து தபால் மூலம் வாக்களிக்கும் முறையின் கீழ் ஆயுர்வேத சபைக்கும், ஆயுர்வேத போதனா வைத்திய சாலைக்கும் ஐந்து அங்கத்தவரைத் தெரிவு செய்யவேண்டியிருப்பதால் இப்பட்டியல் அவசியமாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடமராட்சி மக்கள் மாவீரருக்கு அஞ்சலி

(வடமராட்சி கிழக்கு)

மணலாற்றில் வீரமரணமடைந்த ஆறு போராளிகளின் புகழுடல்களுக்கு வடமராட்சியில் மக்கள் வீதியோ[illegible] மாக எடுத்து வரப்பட்டு வடமராட்சியைச் சேர்ந்த இரு போராளிகளின் புகழுடல்களோடு, ஆறு புகழுடல்களும், சக்கோட்டையில் அமைக்கப்[illegible]

## தடுத்து வைப்பதற்காக அவசர காலச் சட்டம்

(கொழும்பு)

அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்ய வேண்டி ஏற்படும். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைவரையும் விடுதலை செய்தால் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை எதிர்க் கட்சியினரைக் கேட்க விரும்புவதாக பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்கா குறிப்பிட்டார்.

அவசர காலச் சட்டத்தின் [illegible] வின் ஒருவராவார். வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருள்களை அனுப்பிவைக்கும் பொறுப்பினை இவர் ஏற்றிருக்கிறார். அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டால் இந்தப் பணி பாதிக்கப்படும். அவசர காலச் சட்டத்தின் கீழ் இருபத்தி மூன்று பிரமாணங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும் பிரதம மந்திரி அவசர காலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தின் போது தெரிவித்தார்.

மேலும் அவர் [illegible]

மேலும் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையையும், தீர்வையும் பற்றிப் பேசும் சிறிலங்கா அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் பிரச்சினையின் முக்கிய அம்சமான தமிழரின் சுயநிர்ணய உரிமைபற்றியோ, அன்றி அதிகாரப் பரவலாக்கல் பற்றியோ பேசுவதைவிட வடக்கு - கிழக்கு தேர்தல் பற்றியும், முதலமைச்சர் பதவி பற்றியுமே பேசுகின்றார்கள். தமிழர் தேசிய இனப் பிரச்சினை தேர்தல் நடைபெறாததினாலும் முதலமைச்சர் இன்மையாலும் தீர்க்க முடியாது உள்ளதுபோல் இருக்கின்றது அவர்களின் பேச்சு.

இலங்கையில் இருந்து ஐரோப்பியர் வெளியேறிய பின்னர் தமிழர் பிரதேசத்தில் பல தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. தேர்தல்களில் தமிழ்ப் பிரதிநிதிகளும் வெற்றி பெற்றார்கள். பாராளுமன்றம் சென்றார்கள். ஆனால் தொடர்ந்தும் பிரச்சினைகள் அதிகரித்தனவே ஒழிய தீர்க்கப்படவில்லை. தேர்தல்களும் தொடர்ந்தன. ஆனால் பிரச்சினைகள் அதிகரித்தன. தேர்தல் முறை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்ற நிலையிலேயே ஆயுதப் போராட்டம் வெடித்தது.

ஆயுதப் போராட்டம் தேர்தல் முறைக்கு எதிராக வெடித்ததல்ல. தமிழரின் உரிமைகள் மறுக்கப்பட்டது தொடர்பாகவும், தாயகம் அபகரிக்கப்பட்டதற்கு எதிராகவுமே வெடித்தது. எனவே தேர்தல் வைத்து விடுவதனாலோ, முதலமைச்சர் வருவதனாலோ பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை.

மேலும் புலிகள் அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும். தலைவர் பிரபாகரன் முதலமைச்சராக வர வேண்டும் என்பதற்காகவும் போராட்டம் நடத்தப்படவில்லை. தலைவர் பிரபாகரன் முதல் மந்திரியாகவும், புலிகள் ஆட்சியாளர்களாகவும் இருக்க எண்ணியிருந்தால் இந்திரா இதற்கென வழங்கிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். அல்லது அதன் பிறகு சிறிலங்கா அரசாங்கத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்து முதலமைச்சராக வந்திருக்கலாம்.

ஆனால், விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் போராட்டம் நடத்துவது தமது சுயநிர்ணய உரிமைக்காகவே ஒழிய பதவிக்காகவல்ல. ஆகையினால், இனப் பிரச்சினை தீர்விற்கு முதல் செய்யவேண்டியது தமிழர் போராட்டத்தை அங்கீகரித்தலாகும். அதாவது தமிழரின் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரம். சிறிலங்கா அரசாங்கம் முதலில் அதைச் செய்யட்டும். அதன் பிற்பாடு சந்தேகம் இருப்பின் யார் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதை அறிவதற்கு தேர்தல் நடத்தலாம். ஆனால் அதையும் தீர்மானிக்க வேண்டியவர்கள் தமிழ் மக்களே ஒழிய சிறிலங்கா அரசாங்கமல்ல.

---

மடைந்த ஆறு போராளிகளின் புகழுடல்களுக்கு வடமராட்சியில் மக்கள் வீதியோரங்களில் வரிசையில் நின்று மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் கடந்த திங்கட்கிழமை வீரமரணமடைந்த போராளிகளான வாணி (சி. வசந்தகுமார், உடுத்துறை) வினோத் (இ. யுவராசா, வத்திராயன்) சனத் (செ. ஜெயசீலன், கட்டைக்காடு) தர்மிளா (ம. மாலா, ஆழியவளை) யசி (ஆ. சியாமளாதேவி, தொண்டமனாறு) விவேக் (ம. மகேந்திரன், கரவெட்டி) ஆகிய போராளிகளின் புகழுடல்களுக்கே மக்கள் வீதியெங்கும் வரிசையாக நின்று கடந்த செவ்வாய்க் கிழமை (24-9-91) மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இவர்களில் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த நான்கு போராளிகளின் புகழுடல்கள் அவர்களது வாசஸ்தலத்திலிருந்து எடுத்துவரப்பட்டு மாமுனையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன.

அதன் பின்னர் இவர்களின் புகழுடல்கள், வடமராட்சி கிழக்கிலிருந்து மருதங்கேணி, பருத்தித்துறை வீதியால் வாகன அணிகளில் ஊர்வல

போராளிகளின் புகழுடல்களோடு, ஆறு புகழுடல்களும், சக்கோட்டையில் அமைக்கப்பட்ட, விசேட அரங்கில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

அங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் வடமராட்சி மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த சந்திரிகா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

அதன்பின்னர் புகழுடல்கள் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன. (36)

## உடற்கல்வி கற்கை நெறி

விளையாட்டு உடற்கல்விக்கான தொலைக் கல்வி ஆசிரியர் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அக்டோபர் மாதம் முப்பதாம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பங்கள் சிரேஷ்ட விரிவுரையாளர் தொலைக் கல்வி நிலையம் யாழ் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

# எழுத்தறிவற்றோருக்கு கல்வி வழங்க ஏற்பாடு

(நல்லூர்)

எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு எழுத்தறிவுக் கல்வியை வழங்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள ஐம்பது வயதுக்குட்பட்ட எழுத்தறிவு அற்றவர்களின் கணக்கெடுப்பு கி. சே. அலுவலர் பிரிவு வாரியாகவும், உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாகவும் செய்யப்பட்டுள்ளன.

எழுத்தறிவற்றவர்கள் பற்றிய தரவுகளைத் திரட்ட உதவி அரசாங்க அதிபர்களைச் சந்திக்குமாறு வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கோட்டக் கல்வி அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

எழுத்தறிவற்றவர்கள் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

விஜயதுங்கா குறிப்பிட்டார்.

அவசர காலச் சட்டத்தின் கீழ் சில நியமனங்கள் வழங்கப்பட்டன. அத்தியாவசிய சேவை ஆணையாளர் இவ்வாறு நியமிக்கப்பட்டவர்க

நீடிப்பு தொடர்பான விவாதத்தின் போது தெரிவித்தார்.

மேலும் அவர் வடக்குக் கிழக்கில் புலிகளுடனான யுத்தத்தை இன்னும் சில மாதங்களில் முடித்து வெற்றி காண்போம் என்றும் தெரிவித்தார்.

# சிலரின் ஆட்சிக்கு வரும் கனவு பலிக்காது

## • ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

''எதிர்க் கட்சிகளுடன் இணைந்து ஆட்சிக்கு வரமுடியும் என்று சிலர் கனவு கண்டனர். ஆனால் அந்தக் கனவு பலிக்காது. அவ்வாறு வர முடியாது என்பதை இன்று உணர்ந்து விட்டனர்''

இவ்வாறு கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரும், சபை முதல்வருமான ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் கடந்த புதனன்று தெரிவித்தார்.

## விஞ்ஞான வினா விடைப்போட்டி

யாழ்ப்பாண விஞ்ஞானக் கழகத்தினால் க. பொ. த. (உயர்தர) விஞ்ஞான மாணவர்களுக்கிடையே விஞ்ஞான வினாவிடைப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது. வரும் செவ்வாயன்று (01-10-91) காலை ஒன்பது மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்ச்சியில் துணைவேந்தர் அ. துரைராசா, பிரதம கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

## பிற்போடப்பட்டது

29-9-91 அன்று நடைபெற இருந்த யாழ். மாவட்ட சி. க. கூ. ச சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது மேற்படி கூட்டம் 20-10-91 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 30 மணிக்கு யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என அறியத்தரப்படுகிறது.

---

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளன. இவற்றை முறியடித்தே நாம் எமது தரத்தை உயர்த்த வேண்டும்.

இங்கு உழைக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு முதல் இல்லை. நிலம் இல்லை, வீடு இல்லை, கல்வி கற்க வசதி இல்லை. ஆனால் இவை பெரும்பாலானவர்களிடம் இருக்கிறது. இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து அவர்கள் அதனைப் பயன்படுத்துவதில்லை இவர்கள் அதனை தற்காலிகமாக எம்மிடம் ஒப்படைக்க தாமாக முன்வர வேண்டும். இதன்மூலம் அத்தரிசு நிலங்கள் உற்பத்திக்குப் பயன்படும். தேச நன்மை கருதி விடுதலைக்காக இவற்றை வழங்கலாம்.

நாம் இதனை வலிந்து பெறவேண்டியுள்ளதே தவிர பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ள எமது மக்களுக்காக இதனைத் தாமாக வழங்க எவரும் முன்வருவதில்லை. இந்த நிலை முற்றாக மாறவேண்டும்.

வசதிபடைத்தவர்கள் எமது மண்ணை விட்டு வெளியேறி விட்டனர். ஏழை மக்களே இத்தனை இடர்களுக்கும் மத்தியில் அதனைத் தாங்கி அனுபவித்துக்கொண்டு மண்ணை விட்டு ஓடாமல் வாழ்கின்றனர் இந்த ஏழை மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக நாம் தொடர்ந்தும் உழைப்போம்.

# இந்திய இராணுவம் இருந்திருப்பின் புலிகள் சரணாகதி அடைந்திருப்பர்

## காமினி திசாநாயக்கா

(கொழும்பு)

இந்தியப்படை இன்னும் கொஞ்சக் காலம் இங்கு தங்கியிருந்தால் புலிகள் இயக்கம் இந்தியப் படைமுன் சரணாகதி அடைந்திருக்கும் இந்தியப்படை வெளியேறிய பின் அந்த இடைவெளியை இலங்கை இராணுவ படையைக் கொண்டு நிரப்பி இருக்கலாம்.

இவ்வாறு முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் காமினி திசநாயக்கா குருநாகலில் நடைபெற்ற ஐ.தே.க. அதிருப்தியாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய போது தெரிவித்தார்.

கடந்த வருடம் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையில் உள்ள கடைசி இந்தியப்படை வீரனும் வெளியேற வேண்டும் என காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி பணிப்புரை வழங்கிய பின்பே இந்தியப்படை மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் வெளியேற வேண்டும் என ஜனாதிபதி மஹியங்கனையில் கோஷம் எழுப்பினார் என காமினி தெரிவித்தார்.

ஜி. எம் பிரேமச்சந்திரா உரையாற்றுகையில் எதிர் காலத்தில் அரசியலமைப்புச் சட்டத்தை வைத்துக் கொண்டு எவரும் தனிநபர் சர்வாதிகாரம் நடத்தக் கூடாது என்பதற்காகவே இந்தப் போராட்டம் நடத்துகிறோம் என்று தெரிவித்தார்.

# இல. தீவிரவாதிகளுடன் நக்சலைட்டுக்கு தொடர்பு

## - ஆந்திர மாநில உள்துறை அமைச்சர்

(ஹைதராபாத்)

தமிழகத்திலும், கர்நாடகத்திலும் இயங்கும் சில இலங்கைத் தமிழ்த் தீவிர வாதிகளோடு மக்கள் யுத்தக் குழு என அழைக்கப்படும் நக்சலைட்டுக்கள் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களிடம் இருந்து ஆயுதங்களை பெற்றுள்ளார்கள்.

இவ்வாறு ஆந்திர மாநில உள்துறை அமைச்சர் ஆந்திர சட்ட சபையில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை விட்டு விலகிய மட்டக்களப்பைச் சேர்ந்த கருணாகரன் அல்லது வேணு, சுரேஷ் என அழைக்கப்படுபவர் பன்னிரண்டு ஏ.கே. 47 ரக ரைபிள்களை மக்கள் யுத்த குழுவினர்க்கு வழங்கினார் என்றும் அந்த அமைச்சர் தெரிவித்தார்

இதே நேரம் பாரதிய ஜனதாக் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர் ரவிந்திர நாத் ரெட்டி ஆந்திர பிரதேச எல்லையிலுள்ள சித்தூர் மாவட்டத்தில் நக்சலைட்டுகளுக்கு விடுதலைப் புலிகள் ஆயுதப் பயிற்சி வழங்குகின்றார்கள் என்று தெரிவித்தார்.

# திருத்தம்

## யாழ். பல்கலைக்கழக ஆய்வு நூல்களின் விற்பனை

இறால் வளர்ப்பு நூலாசிரியர்

கலாநிதி கே. சித்திரவடிவேலு

மேலே குறிப்பிட்டவாறு கலாநிதி கே. சித்திர

# சனி மட்டுமே அனுமதி

வடபகுதிக்கு மண்ணெண்ணை எடுத்துச் செல்வதற்கு இனிமேல் ஒவ்வொரு சனிக்கிழமைகளில் மட்டுமே சிறிலங்கா இராணுவத்தினர் அனுமதி வழங்குவர் என வவுனியாவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையிறவு

தத்தின் போது நான் என்ன செய்தேன் என்று ஜனாதிபதி கேள்வி எழுப்புகிறார். அவருக்காகவே இதனை நான்

# ஜனதாதள தலைவர் சுட்டுக்கொலை

ஜனதாதளின் மூத்ததலைவர்களில் ஒருவரான ராஜ் தேவ் யாதவ் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டார்

மொகல் சராய் ரயில் நிலையத்தில் இந்தச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றதாகவும் இவரது மெய்ப்பாதுகாவலரும் படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத நபர்களால் இவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என உத்தரப்பிரதேச பொலிசார் தெரிவித்துள்ளனர்

யாழ் மாவட்டம்

தில் ஒன்பது இடங்களைக் கைப்பற்றியிருந்தமை தெரிந்ததே. 1989ஆம் ஆண்டு மே மாதத்தில் பாராளுமன்றத்தில் பதவியேற்ற சுயேச்சைக் குழுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்தம் மூண்டதைத் தொடர்ந்து அதே ஆண்டு ஜூலை மாதம் இருபத்து மூன்றாம் திகதியுடன் தம் பதவிகளைத் துறந்தனர்.

சுயேச்சைக் குழுவின் தலைவரான திரு. எட்வேர்ட் செபஸ்தியாம்பிள்ளையும், புதிய பட்டியலில் இடம்பெறும் திரு. சிவஞானமும் கடந்த வாரம் புதன்கிழமை கொழும்பு சென்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வாவைச் சந்தித்து புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர். நேற்றிரவு இவர்கள் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர். மற்றும் மூன்று இடங்களுக்கான பிரதிநிதிகளும் விரைவில் தெரிவு செய்யப்படலாமெனத் தெரிய வருகிறது.

பிரேரணை

# விஞ்ஞானம் கற்றோரும் பதிவு செய்துகொள்ளலாம்

யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கான பதிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன க.பொ.த. உயர்தர) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களும் மற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் சமமான பல்வேறு கல்வித் தகைமையுடையவர்களும் கலை, வர்த்தகம் ஆகிய இரு துறைகளுக்கும் பதிவு செய்துகொள்ளலாம்.

பௌதிகவிஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் பிரிவுகளில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தோர் கலை பட்டப் படிப்பிற்கு பதிவு செய்யக் கூடிய நெகிழ்ச்சியை இக்கற்கை நெறி கொண்டுள்ளது.

1990-ஆண்டில் பரீட்சை எழுதிப் பெறுபேறு பெற்ற மாணவர்கள் இவ்வாண்டு பதிவு செய்து கொள்ள முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்கள்

# சம்பள உயர்விற்கு அமைச்சு அங்கீகாரம்

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு அவர்கள் தரங்களுக்கேற்ப வருடமொன்றுக்கு ரூபா 75,000 வரை சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சர்கள் குழு அண்மையில் வழங்கியுள்ளது.

சர்வதேச ஆசிரியர் தினமான ஒக்டோபர் 6 ஆம் திகதி இப் புதிய சம்பளத் திட்டம் வெளியிடப்படும் சாத்தியக் கூறுகள் இல்லை என்று கல்வி உயர்கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் திடீர் பதவி விலகல் இத்தாமதத்துக்கான காரணம் என்று அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

புதிய அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படாததால் அமைச்சு வேலைகளில் தாமதமேற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மத்திய அரசு உறுதியாக இல்லை

பொருளாதாரப்பளு, இலங்கைத் தமிழ்த்தீவிரவாதிகளின் தொல்லைகள் ஆகிய முக்கிய பிரச்சினைகளில் இந்திய அரசாங்கம் உறுதியற்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

மேலும் அவர் புலிகளின் நடவடிக்கைகளை ஒழிக்கத் தாம் கோரிய நிதி உதவியை இன்னும் மத்திய அரசு அளிக்கவில்லை எனவும் தெரிவித்தார்

மணலாற்றில்

றிரவு தெரிவித்தது.

சிறிலங்கா இராணுவத்தினர் தமது முழுப்பலத்தையும் பிரயோகித்து மணலாற்றுப் பகுதியில் சண்டையிட்டு வருவதாக இராணுவ அதிகாரி கேணல் முனசிங்கா பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியிருந்தமை தெரிந்ததே அகோரமான விமானக் குண்டுவீச்சு

24 தமிழக

லைச் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த வாரம் கச்சதீவுக்கு அருகில் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டு கடலில் தூக்கி வீசப்பட்டு நீந்திக் கரை சேர்ந்த தமிழக மீனவர்கள் விடுதலைப்புலிகளினால் பராமரிக்கப்பட்டு வரு

## நூல்களின் விற்பனை

இறால் வளர்ப்பு நூலாசிரியர்
கலாநிதி கே. சித்திரவடிவேலு

மேலே குறிப்பிட்டவாறு கலாநிதி கே. சித்திர வடிவேலு எனத் திருத்திக் கொள்ளவும்.

தவறிற்காக மன்னிக்கவும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(B/3206)

---

# 8-ம் நாள் நினைவஞ்சலியும் வீரவணக்கமும்



மண்ணில் 30 - 09 - 1972

மண்ணிற்காக 22 - 09 - 1991

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீர மரணமடைந்த

## வீரவேங்கை வினோத்

(இராசையா யுவராஜா, வத்திராயன் வடக்கு, தாளையடி)

எல்லையில் எதிரிபடை
எக்காளம் இடும்போது
எட்டி உதைக்க — நீ
எங்களை விட்டுச் சென்றாய்.
மந்தைக் கூட்டம் அவர்
மண்ணை விட்டோட
மரணித்த மாவீரனே — உன்னை
மறக்கமாட்டோம் என்றும்.

உன்னைப் பெற்றெடுத்த பெருமையுடன்

(B-3210) வத்திநகர் மக்கள்

---

ஆணையிறவு

த்தின் போது நான் என்ன செய்தேன் என்று ஜனாதிபதி கேள்வி எழுப்புகிறார். அவருக்காகவே இதனை நான் தெரிவித்தேன் என்று குறிப்பிட்டார்.

மரணம் என்றால் என்ன என்பதை நான் குண்டுவெடிப்பில் சிக்கியபோது அறிந்து கொண்டேன். ஆகையால் மரணத்தைப் பற்றி நான் அஞ்சவில்லை.

ஜனாதிபதி மீது கொண்டு வரப்பட்டுள்ள அரசியல்குற்றவியல் மனுதொடர்பாகஎன்ன அடிப்படையில் வாக்களிக்க வேண்டும் என்பதை பொது மக்கள் திர்மானித்து விட்டார்கள்.

தனிநபர் சர்வாதிகாரத்தை ஒழித்து மக்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதே எமது போராட்டத்தின் அடிப்படை நோக்கமாகும் என்றும் அத்துலத்முதலி தனது உரையில் குறிப்பிட்டார்.

வவுனியாவில்

மாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப்படிவத்துடன், வவுனியா மாவட்டத்தில் தொழில் புரிவதை உறுதிப்படுத்தும் மேலதிகாரியின் பொர்சுக்கடிதத்தினைக்காண்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம் எனப் போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவு அறிவித்துள்ளது.

கிராமிய

பட்ட இந்த எறிகணை வைத்தியசாலையின் ஆண்கள் விடுதியின் மேல்கூரையில் விழுந்து வெடித்துச் சிதறியதினால் வைத்தியசாலையின் விடுதியில் தங்கி சிகிச்சை பெற்று வந்த இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி மறுநாள் காலை புங்குடுதீவு வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகன மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டனர்.

நோயாளிகள் படுத்திருந்த கட்டில்களும் பலத்த சேதமடைந்துள்ளன. இதே நேரத்தில் மற்றொரு எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது அதுவும் வைத்திய சாலைக்கு வடக்குப் பக்கமாக வெளிவளவில் விழுந்து வெடித்துச் சிதறியது. (14)

செய்யப்படலாமெனத் தெரிய வருகிறது.

பிரேரணை

நுட்ப அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கட்சிதொடர்பான விடயங்களைக் கட்சியின் செயலாளர் கவனிப்பார். நம்பிக்கையில்லாத் திர்மானம் பற்றியமுடிவுகளைஅமைச்சரவை தொடர்பு சாதனங்களுக்கு அறியத்தரும் என்றார் அவர்.

பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றலாம்என்று எதிர்க்கட்சிகள் நினைப்பது வெறும் பகற்கனவாகும் என்று காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துக்கோறல கூறினார்.

புலிகளை

அதைச் சாதிக்கும் வரை நாம் ஆயுதப் போராட்டத்தை நிறுத்தப் போவது இல்லை. எமக்குப் பாதகமானவிதத்தில் பேச்சுவார்த்தை நடத்தப் போவதுமில்லை

யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வரவே நாம் விரும்புகின்றோம். நாட்டை அபிவிருத்தி செய்வதே எமது நோக்கம். யுத்தத்தில் உரிய காலத்தில் நாம் வெற்றி பெறுவோம். இந்த யுத்தத்தைநாம் சரியான முறையிலேயே நடத்துகின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

வதாக இராணுவ அதிகாரி கேணல் முனசிங்கா பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியிருந்தமை தெரிந்ததே அகோரமான விமானக் குண்டுவீச்சுகளுக்கும், எறிகணைத் தாக்குதல்களுக்கும், ஈடுகொடுத்து சளைக்காமல், கடுமையாக விடுதலைப் புலிகள் போரிட்டனர். சிறிலங்கா இராணுவத்தினரின் குண்டு வீச்சுகளாலும், எறிகணைத் தாக்குதல்களினாலும் அடர்ந்த காட்டுப் பகுதியில் பல இடங்களிலும் தீ பரவியது. காடுகள் எரிந்து நாசமாகின. குடியிருப்புகள் சேதமாக்கப்பட்டன.

இந்நிலையிலும் புலிகள் சளைக்காது தொடர்ந்து போரிட்டனர். விடுதலைப் புலிகள் தொடுத்த எதிர்த் தாக்குதல்களில் இராணுவத் தரப்பில், பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதோடு நாற்றுக்கணக்கான இராணுவத்தினர் படுகாயமடைந்து உள்ளனர்.

கொழும்பிலும், அநுராதபுரத்திலும் இராணுவஆஸ்பத்திரி வார்ட்டுகளில் இடநெருக்கடி ஏற்பட்டன என்று வெளி வந்த செய்திகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

முப்படைகளின் தாக்குதல்களுக்கும் ஈடுகொடுத்து சளைக்காமல் போரிட்ட விடுதலைப் புலிகள் சிறிலங்கா இராணுவத்தினரை விரட்டியடித்து முகாம்களுக்கு பின் வாங்கச் செய்துள்ளனர்.

லில் தூக்கி வீசப்பட்டு நீந்திக் கரை சேர்ந்த தமிழக மீனவர்கள் விடுதலைப்புலிகளினால் பராமரிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இத் தமிழக மீனவர்கள் இருபத்து நான்கு பேரும் தமக்குசிறிலங்காகடற்படையினர் இழைத்தகொடுமைகள் பற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கு விளக்கிக் கூறிய தாகத் தெரியவருகிறது

பேச்சுவார்த்தை

காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பேச்சு வார்த்தைகளைத் தொடங்குவதற்கு எனக்கு உரிமையுண்டு. அமைச்சர் என்ற கோதாவில் தான் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கமுடியாது அப்படிச் செய்வதானால், அமைச்சர் அவையினதும், ஜனாதிபதியிடமும் அனுமதி பெறவேண்டும் என்றார்

வீரமரணம்

புதுராஜா - மணல்குடியிருப்பு முல்லைத்தீவு)வீரமரணமடைந்தார் நேற்றுக்காலை இடம் பெற்ற விபத்து ஒன்றில் ஈசன் (சிதம்பரம் அசோக்குமார்- 155 ஆம்கட்டை கிளிநொச்சி) வீரமரணமடைந்தார்.

இவர்கள் மூவருக்கும் விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---


A/L 91, 92

REVISION, PAPER CLASSES

தாவரவியல்

திரு. பொ. ஐங்கரநேசன்

ஆரம்பம்

30-9-91 (திங்கள்) காலை 8-30 மணி

யூனிவேர்சல்

கந்தர்மடம், — யாழ்ப்பாணம்.

(B/3211)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.